JETIR.ORG ISSN: 2349-5162 | ESTD Year : 2014 | Monthly Issue
JOURNAL OF EMERGING TECHNOLOGIES AND INNOVATIVE RESEARCH (JETIR)
An International Scholarly Open Access, Peer-reviewed, Refereed Journal

# விந்தன் சிறுகதைகளில் சாதிய எதிர்ப்பு

**P.MARIMUTHU**
**PhD scholar**
**Department of Tamil**
**Government Arts college**
**Coimbatore - 641 018.**
**Tamilnadu , India**

***Abstract***

Many creators and artists especially writers writing about life and situations as their main theme.The ultimate aim of their work is to provide positive response to society and it's development, here too Vindhan and his short stories present the disease which spread in the peoples mind psychologically and mechanically. Through his short stories Vindhan explained the economical condition of people and oppression faced by caste discrimination . It also provides important details social evil untouchability, inequality in society. Vindhan also focus a particular group or community and their development and progress through his short stories. Through this research essay explained the way Vindhan and his stories dealt with caste system and it's oppression.

**முன்னுரை:**

இறைவன் படைப்பில் எண்ணற்ற உயிர்கள் வாழ்ந்து மறைவதைக் காண முடிகிறது. மதம், இன, மொழி பாகுபாடின்றி பறவைகள், விலங்குகள் வாழ்ந்து வருகின்றன. ஒற்றுமைக்கு உதாரணமாக பறவைகளைக் காண முடிகிறது. உலக வாழ்வின் நிலையாமையை உணர்ந்தவன் மனிதன் ஆவான். மனிதன் தங்களுக்குள் மனித நேயத்தைத் தொலைத்து ஏழை பணக்காரன், உயர்ந்த குலம், தாழ்ந்தவன் எனப் பிரிவினைகளை உருவாக்கி வாழ்ந்து வருகிறான். பல நூறாண்டுகள் வரலாற்றில் இடம்பெற்ற மன்னர்களும் தங்கள் வாழ்க்கையை இழந்து நிலையாமையில் மறைந்து போயினர். சராசரி மனிதர்கள் காலந்தோறும் தங்களின் அடையாளம் சாதி எனக் கருதி, ஆணவக் கொலைகளைச் செய்து நற் சமுதாயத்தை வன்முறைச் சமுதாயமாக மாற்றம் பெறச் செய்கின்றனர்.

**3.1 சாதிய சொற்பொருள்:**

சாதி என்பது பழைய தமிழ்ச்சொல். இது ஜா என்பதிலிருந்து வருவதாக சொல்லப்பட்டாலும் சாதிகள் பிறப்பினால் உண்டாகவில்லை. ஆதியில் தொழிலால் தான் உண்டாயின. ஆதிகால சமூகம் என்பது அறியாமை நிறைந்து, வேட்டை சமூகமாக வாழ்ந்திருந்தது. நாகரீக வளர்ச்சி மனிதனை மனிதன் வேறுபடுத்துகிறது. கால சூழ்நிலைகளினால் இனமக்கள் தொழில் சார்ந்தும் உணவிற்கும் இடப்பெயர்வு அடைகின்றனர். தங்களுக்குள் இனப்பிரிவும் தோன்றுகின்றன.

**3.2 இலக்கியங்களில் சாதியம்**

சங்க காலத்தில் பாணர், துடியர், ஈமச்சடங்கில் ஏவல் புரிவோர், பிறர் அழுக்கை வெளுப்போர், கூடை முடைவோர், வயல்களில் வேலை செய்வோர் என அகநானூறு குறிப்பிடுகிறது.

**“மடிலாயத் தன்னுமை கிழிசினள் குரரே”** (அகநானூறு, ப. எண் 157)

மனிதனின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்கு தொழில் அவசியமாகிறது. மனிதனுக்கு விவசாயம் அவசியமானது. உணவு மனிதனுக்கு தேவையான ஒன்று. அவற்றைப் போல மனிதன் சார்ந்த குப்பை போன்ற கழிவுப் பொருட்களை அகற்றுவதும் தேவையான ஒரு செயலாகும். இத்தகைய வேறுபட்ட செயல்களில் உயர்வு தாழ்வு கருதுவதும், சாதி அடிப்படையில் பிரித்து அம்மக்களை கையாள்வதும் மனித அறமற்றது.

**“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்"**
**(திருக்குறள், குறள் எண் 972)**

பிறப்பினால் அனைவரும் ஒருவரே பிறப்பில் வேறுபாடு இல்லை என்பதை உணர்த்துகிறது.

மனிதனின் வளர்;ச்சியைக் கெடுக்கும் சாதி மத பேதங்களை விட்டு விலகுதல் சிறந்த நற்குணம் என்பர். சாதியின் பெயரில் தனிமனிதன் அனுபவிக்கும் அவ மரியாதைகளால் தற்கொலை எண்ணங்கள் தோன்றுகின்றன. மனிதன் தன் வாழ்வில் மரணத் தருவாயை அடையும்போது உலகில் உள்ள மூட நம்பிக்கைகளையும் சாதிய நிலைப்பாடுகளையும் கண்டு வருந்துவான்.

**“சாதி குலமில்லை சற்குரு வறிந்தால்**
**சாதி பிரிவினிலே தீயை மூட்டுவோம்**
**சாதி பேதம் என்பதொன்று சற்றுமில்லை**
**இல்லையே" (சித்தர் பாடல்கள், ப. எண் 4)**

என்று சித்தர்கள் சாதியை வெறுத்துப் பாடியுள்ளனர். சாதிப்பிரிவை மிகுதிப்படுத்தி வளர்க்கும் சடங்கு சாத்திரக் குப்பைகளால் தீமையேயன்றி அணுவளவும் நன்மை இல்லை என்கின்றனர்.

இலக்கியங்களில் மட்டுமல்லாமல் மனிதனின் அறியாமையைப் போக்க கதை, கவிதைகளிலும் சாதியக் கொடுமைகள் எடுத்துத் தரப்படுகின்றன. விந்தனின் சிறுகதைகளில் சாதிய எதிர்ப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஆராய்வது இவ்வியலின் நோக்கமாகும்.

**3.3 பொருளாதாரமும் சாதியும்**

ஏழையாகப் பிறந்த சோலையப்பனுக்கு பொருளாதார முன்னேற்றத்திற்காக உதவும் வகையில் பெட்டிக்கடை அமைத்துத் தந்தும், அவன் கீழ்சாதி என்பதால் கிராம மக்கள் ஒருவரும் அவனிடம் பொருட்கள் வாங்காமல் சென்று விடுகின்றனர். ஒரே உரிமை சிறுகதையில் இந்நிகழ்வினை விந்தன் உருவாக்கியுள்ளார். சாதி ஒரு தனி மனிதனை எத்தகைய வகையில் கொண்டு செல்கிறது என்பதனை எடுத்துக் காட்டியுள்ளார்.

**“என்ன இருந்தாலும் நான் பறையன் பறையன் தானுங்களே? என் கடையிலே யாராச்சும் ரொட்டி, வாங்கணும்னா அவங்களும் பறையர்களாத் தானே இருக்கணும்? அவங்களுக்குத்தான் கூழுக்கே பஞ்சமாச்சுதுங்களே, அவங்க எங்கே ரொட்டி, கிட்டி வாங்கப் போறாங்க? வந்தா ஒசந்த சாதிக்காரருதான் வரணும், அவங்க எங்கிட்ட எங்கேயாச்சும் வருவாங்களா? - ஆனா, ஒண்ணு மட்டும் சொல்லுணங்க. அந்த மட்டும் அவங்க என் கடைக்கு வராம இருந்ததோடு நின்னாங்களே! பறப் பயலுக்கு இங்கே என்னடா ரொட்டிக்கடை?ன்னு என்னையும் அடியா அடிச்சுப் போட்டு இந்தக் கடையையும் காலி பண்ணாமே இருந்தாங்களே அதைச் சொல்லுங்க”**(ஒரே உரிமை, ப. எண் 68).

கீழ்சாதி மக்கள் என்று உருவாக்கப்பட்டுள்ளவர்கள் ஒரு வேளை உணவிற்கும் கஷ்டப்படுகின்றனர் என்பதனையும் கதை வழியே உணர்த்தியுள்ளார். சாதிக்கொடுமை பட்டினிக்கும் வழிவகுக்கும், முன்னேற்றம் அற்ற சூழ்நிலைகளையே உருவாக்கும் என்பதனை குறிப்பிட்டுள்ளார். உணவு

கிடைப்பதற்கும் உண்பதற்கும் சாதி ஒரு தடையாகிறது. தேவர் மக்கள் உரைப்பது பசிப்பிணி தீர்த்தல் வேண்டும் என்பது.

**'பசிப்பிணி தீர்த்தல் என்றே அவரும்**
**தவப்பெரு நல்லறம் சாற்றினர்"**
**(ப. மார்க்கபந்து, மணிமேகலை, அடி 12, பா. எண் 118)**

**உயர்குலமும் சாதியும்**

உயர் குலத்தில் பிறந்த ஒருவன் உடல் வருந்தும் அளவு கஷ்டம் இல்லாமல் வாழ்ந்து வருகிறான். ஏழை, கீழ்சாதி இருக்கும் வரை தொழிலாளியாக வறுமையில் சாவதும், சாதிக்கொடுமையை கூறுகின்றது. செய்ததும், செய்வதும் சிறுகதை இந்நிலையை எடுத்துக்கூறுகிறது.

**"பாங்கர் பஞ்சாபகேசனுக்கு அவர் பிள்ளையாய்ப் பிறந்தார்! அந்த அதிசய மனிதர் செய்ததெல்லாம் அவ்வளவேதான்"**
**(செய்ததும் செய்வதும், ப. எண் 293)**

இதனைக் கேட்டதும் ஏழையாய், தாழ்ந்த குலத்தில் பிறந்த அருணாச்சலம் தந்தை தோட்ட வேலை, தாய் வீடுகட்டும் வேலை, தான் பட்டறையில் வேலை செய்வது பிறப்பினைப் பொறுத்தா என்று ஆச்சரியத்தில் மூழ்கினான். சமுதாயத்தில் ஒரு இனம் சார்ந்த மக்களின் தலைமுறை ஒதுக்கப்பட்ட பின் உயர்வினை அடைவது இல்லை. செல்வம் என்பது பரம்பரையைப் பொறுத்து அமைகிறது என்பதனை சிறுகதையில் எடுத்துக் கூறியுள்ளார்.

சாதி மனித சமுதாயத்தின் முன்னேற்றப்பாதைக்கு தடைக்கல்லாகும். விழிப்புணர்வு இல்லாத தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் உரிமையைப் பெறுவது கடினமானது. கால சூழ்நிலையே சாதி நிலைகளைக் களைத்தெறியும். மனிதனின் மனங்களில் அன்பு நிறைந்த எண்ணங்கள் உருவாக வேண்டும். மனிதநேயம் காக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் சாதிக் கொடுமைகள் விலகும்.

**3.5 சாதியும் ஏற்றத்தாழ்வும்**

பொன்னையா, ஏழையாகப் பிறந்த நடுத்தரக் குடும்பம். கீழ்சாதி என்கின்ற அடையாளம் மட்டும் உள்ளது. வீடு இன்றித தவிக்கிறான். எல்லோரும் ஓர் குலம் என்று கூறுகின்ற மேல் சாதி ஆகிய தர்மலிங்கத்திடம் இருப்பதற்கு இடம் கேட்கிறான். தன்னைச் சமுதாய மக்கள் பெரிய மனிதன் என்று கூறவேண்டும். சாதியை மறுத்தவன் ஏற்றத்தாழ்வு இல்லாதவன் என மக்கள் கூற வேண்டும் என்று எண்ணுகிறான். தர்மலிங்கம் இந்நிலையில் பொன்னையாவிற்குப் பணம் கொடுத்து உதவுகிறான். பொன்னையாவின் வறுமை நிலை சாதி நிலைப்பாடுகளை கதை வழியே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

"நாடு நகரங்களில் எத்தனையோ மாட மாளிகைகள் கூட கோபுரங்கள் மேல் ஜாதியைச் சேர்ந்த எத்தனையோ பேர் அவற்றில் ஒண்டுக் குடித்தனம் செய்கின்றனர். அவர்களுடன் நாய் கூடச் சரிசமானமாக வாழ்ந்து வருகிறது. ஆனால் பொன்னையா அவன் தான் கீழ்சாதியாச்சே. மரணமடைந்த பின் மயானத்தில் கூட அவனுக்குத் தனி இடந்தானே?".

சமுதாயத்தில் கீழ்சாதி மக்களைத் தனிமைப்படுத்துவதும் மரணத்திற்குப் பின்பும் கூட அவர்கள் ஒதுக்கப்பட்டுள்ளமையை சிறுகதை மூலமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பதவி, பணம் இவற்றின் மூலம் மக்களிடம் செல்வத்தைப் பெற விரும்பும் சுயநலக்காரர்களுடன் ஒதுக்கப்பட்ட மக்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பதனைச் சிறுகதை மூலம் உணர்த்தப்படுகிறது.

சாதிப் பெயரிலும் ஏழை என்கின்ற நிலையிலும் ஒதுக்கப்பட்ட மக்களின் அறியாமை விழிப்புணர்வு இன்மை காரணமாகவே தன்னை மேலும் தாழ்வுப்படுத்திக் கொள்கின்றனர். வீடுகட்டிக் கொள்வதற்காகத் தர்மலிங்கம் கொடுத்த பணத்தை பொன்னையா உயர்வாகக் கருதுகிறான். தன்னைத் தற்காத்துக் கொள்ள கொடுத்த பணம் என்பதனை உணரவில்லை.

"தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக கொடுத்த பணம் தன்னை எப்பொழுதுமே தாழ்த்தப்பட்டவனாக வாழச் செய்யும் பணம் அது என்பது ஏழை பொன்னையாவுக்கு எப்படித் தெரியும்".

சாதியின் பெயரினால் ஒதுக்கப்படுகின்ற மனிதன் சகமனிதர்கள் அவனை மரியாதையுடன் வழிநடத்துவதில்லை விலங்குகளை விட கொடுமையான முறையில் பார்க்கப்படுகிறான். மேல் சாதியினரிடம் கைகளைக் கட்டிக் கொண்டு பேச வேண்டும். கீழ்ப்படிந்து நடத்தல் போன்றவை தனி மனிதனின் சுதந்திரத்திற்கு உரிமைக்கு எதிரானது. இத்தகைய நிலையில் சமுதாயம் முன்னேற்றம் பெறுவது கடினமானது. தற்கால சாதி வேற்றுமையானது இந்தியாவின் முன்னேற்றத்துக்கு தடைக்கல்லாகும். அது வாழ்வை குறுக்குகிறது, கட்டுப்படுத்துகிறது, பிரிவினை செய்கிறது. அரிப்பு வெள்ளத்தின் முன்பாக அது வந்து மாயும் என்கிறார் விவேகானந்தர்.

**முடிவுரை**

சாதி வேற்றுமை மனித உரிமைகளைப் பெறுவதில் தடையாகவே அமைந்துள்ளது என்பதனை உணர்த்துகிறது. வரலாற்றின் அடிப்படையில் மாற்றங்களினால் சாதி என்கின்ற நிலைப்பாடு மனிதர்களிடம் பரவுகிறது. தாழ்த்தப்பட்ட இனம் சார்ந்த மக்கள் என்று அழைக்கப்படும் மனிதர்களின் சூழ்நிலை மாற்றம் பெற வேண்டும். மனிதனின் உயர்வான நற்சிந்தனைகள் உருவாக வேண்டும். சிறுகதைகளின் மூலமாக கொடுமையும், அதனை மீட்கும் நிலைப்பாட்டினை விந்தன் எடுத்துரைத்துள்ளார்.

**Reference**


1. மதுரை உப்பூரிகுடிகிழார், அகநானூறு, ப. எண் 157.
2. திருவள்ளுவர், திருக்குறள், குறள் எண் 972.
3. சித்தர்கள், சித்தர் பாடல்கள், ப.எண். 4.
4. விந்தன், ஒரே உரிமை, ப. எண் 68.
5. ப. மார்க்கபந்து, மணிமேகலை, பா. எண் 118.
6. விந்தன், செய்ததும் செய்வதும், ப. எண் 293.